**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 10.03.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 15 (LW20)

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிக்கந்தர் | தொழில் | |
| தந்தை பெயர் | மஸ்தான் கனி | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( எதிரி ஆஜர் )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது கீழக்கரை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2023 ம் தேதியன்று திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். திருப்பாலைக்குடி காவல் நிலைய குற்ற எண். 196/2023, பிரிவு 302 இதச வழக்கில் இறந்துபோன முனியசாமியின் பிரேத பரிசோதனை முடிந்தபின்பு தலைமைக்காவலர் பாலமுருகன் என்பவர் இறந்துபோன முனியசாமியின் உடலில் இருந்த பொருட்களை பெற்று காவல் ஆய்வாளரிடம் அன்றைய தினம் மாலை 06.30 மணியளவில் ஒப்படைத்தார். அப்போது நான் இருந்தேன்.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 17:47:52 +0530

ஊதாகலரில் அரக்குகலர் கட்டம் போட்ட கைலியும், NSK என எழுதப்பட்ட ஜட்டி ஒன்றையும், இரத்த மாதிரியை ஒரு டப்பாவிலும் ஒப்படைத்தார். அதை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும், தலைமைக்காவலர் 1661 ராமச்சந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.14** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. அந்த **ஊதாகலரில் அரக்குகலர் கட்டம் போட்ட கைலி** தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த **கைலி அ.சா.பொ.3** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. அந்த **NSK என எழுதப்பட்ட ஜட்டி** தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவதுதான். அது **அ.சா.பொ.4** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. அந்த **இரத்தமாதிரி எடுத்த டப்பா** தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான். அது **அ.சா.பொ.5** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

– இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 17:47:59 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,

இராமநாதபுரம் .